உ

பரமபதி துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு அவர்கள், கானமோகன டி. ஏ.
இராஜாமணியம்மாள், டி. என். சுந்தரராவ்,
ஜெகன்மோகன துப்புசாமி முதலியார்
முதலிய நாடகக் கம்பெனியார்
பலராலும் நடத்திவருகிற

பார்ஷி நாதன

2 5 OCT 192

# அல்லியராசாணி

## சரித்திரம் முதற் பாகம்.

இவை

திருநெல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ
வித்வான் நாராயணக் கவிராஜரவர்கள்
மாணுக்கரிலொருவரான மகா-ள-ள-ஸ்ரீ
கோட்டாறு வீ. உடையார் பிள்ளை
அவர்களா லியற்றப்பெற்று,

மதுரை, புத்தக வியாபாரம்,
இ. ராமசாமிக் கோனரால்,
எக்ஸெல்ஸியர் அச்சியந்திசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

*Registered Copy Right.*

1923. [அணு 2.

O-,2MVB,P
N23
177309

தமிழ்நாடெங்கும் பு[illegible]ள மாஹாவித்வான்

## ஸ்ரீமான் சங்கரதாஸ சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான

சந்தச்சரபம் ஷண்முகதாஸரவர்களியற்றிய

# பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

---

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லாம் தமாஷானபாடல்கள் இதுவே நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். முத்தியை வேண்டிப் பக்தி புரிவோர்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி கோலாகலமாய் வேலவரோடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலநாகரிகத்துக்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டு, சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விடகமே நிறைந்த விசித்திரப்பாடல்கள். பாடலிற்சிறந்த நாடகத்தார்க்கும் பயன்தரும் பாடல்கள். இன்பம் பயக்கும் இந்துஸ்தான், கவாய், தில்லாணு, டப்பா, மெட்டுகளில் சிறந்த பாடல்கள். சிந்தைக்கினிய செந்தமிழ் கமழும் சந்தப்பாடல்கள் நிறைந்த இப்பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமாகவும் கேட்பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் ஒருங்குதிரட்டிப் புதியாயச்சிட்டு வெளிவந்திருக்கின்றன. படிக்கப்படிக்கத் திகட்டாது திரும்பத்திரும்பப் படிப்பதன்றிக் கீழே வைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக் காப்பிகளே தயாரிலிருக்கின்றன. விலை அணு 5.

பழனி, தண்டாயுதபாணிப்பெருமான் மீது

# பக்தி ஆனந்தப்பதங்கள்.

பழனித்தலம் மகா-ா-ா-ஸ்ரீ

## M. S. S. வேலுச்சாமிக் கவிராயர்

அவர்களியற்றியது.

இதில் அடங்கியுள்ள பாடல்கள் நவரசம் பொருந்திய நல்ல நல்ல வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. பாடல்கள் படிக்குந்தோறும் தெண்டாயுதப் பெருமானைக் கண்டானந்திப்பது போலவே இருக்கும். படிக்கப்படிக்கப் பரவசமாக்கும் பாடல்கள். கேட்கக்கேட்கத் தெவிட்டாத பாடல்கள்.

பழனி ஆண்டவனது அழகிய ஆப்டோன் படம் ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளது.

விலை அணு 4.

சேள, சேள என்னும் ஐந்து சரித்திரம் 0—4—0

உ

பரமபதி துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு அவர்கள், கானமோகன டி. ஏ. இராஜாமணியம்மாள், டி. என். சுந்தாராவ், ஜெகன்மோகன துப்புசாமி முதலியார் முதலிய நாடகக் கம்பெனியார் பலராலும் நடத்திவருகிற

பார்வி நூதன

# அல்லியரசாணி

## சரித்திரம் முதற் பாகம்.

இவை

திருநெல்வேலி மகா-௱-௱-ஸ்ரீ
வித்வான் நாராயணக் கவிராஜரவர்கள்
மாணுக்கரி லோருவரான மகா-௱-௱-ஸ்ரீ
கோட்டாறு வீ. உடையார் பிள்ளை
அவர்களா லியற்றப்பெற்று,

மதுரை, புத்தக வியாபாரம்,
**இ. ராமசாமிக் கோனாரால்,**
எக்ஸெல்ஸியர் அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

இதன் விலை] 1923. [அணா 2.

2 5 OCT 19..

177309

உ

பரமபதி துணை.

கானமோகன டி. ஏ. இராஜாமணியம்மாள்; டி. ஜி. ஜெகநாதநாயுடு; ஜி. என். சாமிநாத முதலியார்; பார்ஸி குப்புசாமி முதலியார்; பி. பாலாமணி கம்பெனியார் முதலியோர் விகசிதமாக நடாத்திவருகிற,

பார்ஸி நூதன

# அல்லியரசாணி சரித்திரம்.

முதற் பாகம்.

---

## விநாயகர் துதி.

வெண்பா.

கந்தமிகு தாரணியுங் கார்குழலா ளம்பிகைதன்
சந்தமுறுந் தாளிணையைத தான்போற்றும்-சுந்தரியாள்
அல்லிகதை யோதிடநான் ஆகுமிசை யேறிவரும்
வல்லபைமணாளதுணை வா.

பியாஹாவனு என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

விநாயகா உனை வேண்டினேன் வா வல்லபைநாயகா
வேளை யிவ் வேளை நின்தாளை அன்பாகவே
வினையத்துடன் பணிந்தேன் (விந)

கண நாதனே கன காம்புயத்தையணி விநோதனே
காலனைக்காலா லுதைத்திட்ட நீல
கண்டனருள் புதல்வா (விந)

ஆதி மூலமே எனையாதரிப்பாய்நீ இக்காலமே
ஆயிழை அல்லி சரிதைநானோதிட
அருள்புரி இக்கணமே (விந)

## சரஸ்வதி துதி.

கைஸே நாலேநாலே ராஜதாவனு என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

கலைவாணியே கடாக்ஷிப்பாய்சிந்தன்
கழலிணைபணிந்தேன் கருணைபுரிகுவாய்
தாயேயித் தருணம்வருகுவாய்
மகிழ்ந்துன் அருளைத்தருகுவாய் (கலை)

காசினிபடைத்தோனுசை நேசினிப்ரகாசினி
மாசிலாவுடையணிம கேஸ்வரியென்னுவினி (கலை)

வாரிசவிலாசனித போதலோகவாசினி
கோரினவரத்தைநல்குங் கோதையே உல்லாசினி (கலை)

காயத்ரீகுணகரீ கவலைதன்னைமாற்றுவாய்
சேயனல்லவா உனக்குத் தேவியேகாப்பாற்றுவாய் (கலை)

பாரதிநானல்லிகதை பாடுதற்கென்மீதுகண்
பாரதியையுடனே பாலிப்பாய்நீவந்திவண் (கலை)

## சுப்பிரமணியர் துதி.

ஜோதிசுந்தர சொரூபம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்

பல்லவி.

சோமசுந்தரன் தனயா துதித்தேனையா (சோம)

அநுபல்லவி.

தேமார்வள்ளி தெய்வானை மகிழும்
தேவர்முனிவர்கள் யாவரும்புகழும் (சோம)

சரணங்கள்.

திங்களணிந்திடுஞ் செஞ்சடையோனருள் மைந்தாதேசிகனேவி
டங்கமயில்மீதேறிவருஞ் செந்தூர்-கந்தா-திருத்தோளில்ப
ழங்கணகற்றும்வேல்கொண்டுலாவுந்திவ்வியசெந்தா மரைப்பாதாசு
மங்களமான கடம்பனே வந்துமகிழ்ந்தா தரிப்பாயென்னை

அநுதினமுனதடியே பணிந்தேனே
அடியேனுடையார்க் கருள்முருகோனே
அல்லியின் கதையைச் சொல்லிடநீயே
அன்புடனே துணையாய் வருவாயே (சோம)

## 1-வது சீன். மாளிகை.

# அர்ச்சுனன் தர்பார்.

### சபை வணக்கம்.

வேணும்வேணும் திருவருள்புரி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆசையாகச் சிறந்திடுசபை அரியபெரியோர்
ஆரியர் யாவர்க்கும் தவமுனி
வோரும்பர் மூவர்கட்கும் கற்றுணர்ந்த
அன்புள்ள பாவலர்க்கும் (ஆசை)

அநுபல்லவி.

மாசிலாதே பெற்ற மாதா பிதா
மன்னர் மன்னர்க்குத் தனதாய்
வந்தனந்தந்தேன் சிந்தைமகிழ்ந்தே
விந்தையதாயுள்ள இங்குதானுகந்தே
வந்து வந்து வந்து (ஆசை)

சரணங்கள்.

க்ஷேமமுறுஞ்சிம்மா சனத்துக்கும்
திங்களின் மரபி ேனாருக்கும்
செய்தேன்வந்தனம் எய்தே யிங்கனம்
மெய்யன் ராஜவடி வேல்பதத்துக்கனு
தினம் தினம் தினம் (ஆசை)

அர்—யாரடா சேவகன்! யாரோ ஒலமிடுவதாகச் சத்தம் கேட்கின்றதே? சீக்கிரம் இங்கழைத்து வா.

சே—பிரபு! இதோ அழைத்து வந்துவிட்டேன்.

### அந்தணர் முறையிடல்.

பஞ்சவர்ணமே உன்பாதம் பணிகுறேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மன்னர்களேயா னென்னசெய்வேனின்று
மந்தைப்பசுக்கள் முழுவதுமே
சின்னமதியுள்ள கள்வர்கள் திருடிச்
செலலுகின்றார் விரைவாகவுமே (ம)

அந்தோ இது உங்கள் செங்கோல்முறைமையோ
ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு
நிந்தைசெய்தோர்க் குகந்தரசுசெய்யும்
நீதியிதைப்போல எங்ஙனமுண்டு (ம)

ராஜ்யபாரமுக மிப்படியிருந்தால்
நாட்டினிலுள்ளோர் பிழைப்பதேது
காசினியேபுகழ் பாண்டவர்களெனக்
காத்திடுவீர் மகிழ்வாயிப்போது (ம)

சண்டாளக் கள்வரைத் தண்டித்தே பசுக்கள்
தன்னை மீட்டித்தந் தாளவேணும்
அண்டிவந்தேனேழைப் பிராமணன்யானின்று
ஐவர்களே தயை செய்யவேணும் (ம)

அந்—ஐயஹோ பாண்டவர்களே! துஷ்டர்களாகிய திருடர்கள் என் மந்தையில் புகுந்து, பசுக்களைக்கொண்டு கவர்ந்து போகின்றனர். பராக்கிரமசாலிகளாயுள்ள உங்களுடைய காலத்தில் இவ்விதம் நடப்பதானால்நாங்கள் எவ்விதம்உஜ்ஜீவிப்பது? பெரும் அனீதமாய் இருக்கின்றது. அதோ ஓடுகின்றனர். இப்போதே போய் அவர்களைப்பிடித்துத்தண்டித்து, என்சொத்துக்களை எனக்கு மீட்டிக்கொடுத்துக் காப்பாற்றவேண்டும்.

## அர்ச்சுனன் தரு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேதியரேயஞ்சாதீர் இனிநான்
வீரமதாகவே கள்வரை வேரறச்செய்குவேனிதுததி (வே)

அநுபல்லவி.

போதமில்லாததோர் புல்லர்கள் தன்னையே
பொன்றிடவென்றிடுவேனே இன்றுமுயன்றுசொன்னேனே
பசுக்களைத்திருடும் பாவிகளுயிரைப்
பண்ணவர் தன்பதிசெல்லத் திண்ணமாய்வெல்கிறேனல்ல (வே)

அர்—வேதியர் சிரோமணியே! நீர் அஞ்சவேண்டாம்: உமது இல்லம் செல்லும். இதோ போய் அவர்களைத் தண்டித்து, உமது பொருளை மீட்டித் தருகிறேன். இதோ செல்கிறேன் அங்கு.

[உடனே வில்லை எடுத்துச்சென்று, கள்வரைத்தண்டித்துப்பசுக்களை அந்தணரிடம் ஒப்புவிக்கின்றான்]

வில்லை எடுக்கச் செல்லுங்கால் தருமரும், துரோபதையும் ச சசல்லாபமாய் இருந்ததைக் கண்ணுற்றதோஷம் தீரும்பொருட்டு, நாரதமுனிவரால் எற்படுத்திய ஆக்ஞையின் பிரகாரம் தமையனாகிய தருமர் முதலோரிடம் விடைபெற்றுக் கிருஷ்ணனைத் துணையாகக்கொண்டு தீர்த்த யாத்திரை செல்லுகின்றான்

---

## 2-வது சீன் மதுரைமாநகரம்.

## அர்ச்சுனனும், கோபாலகிருஷ்ணனும் தீர்த்தயாத்திரை செய்துவருதல்.

கிருஷ்ணன்:

முருகன் திருமால் மருகன் பெருமை என்ற வர்ணமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாராய்வணவிந்தை பாராய்விஜயா-வீர
வானோர்போற்றராஜ ுணா தீரனருள்சேயா (வா)

அநுபல்லவி.

காரிபம்வேங்கையும் காட்டுப்பன்றிகளும்
கலையாமலே கலைமானுடன் புலிகூடியே பலதேகுது (வா)

சரணங்கள்.

கருணைமிகுந்த காண்டீபனேநாமே கடுகவழிநடந்தே-மா
தருமாபுரியையும் பீமாபுரியையுந் தானேகடந்துவந்தே
கருகிறமாமிந்திர கானகந்தாண்டிநற்
கதிபெற்றிட மதிபொத்திடும் விதிசத்தியின் பதிவந்தனம் (வா)

காசிநதியிற்குளித்துவிஸ்வேசரின் காக்ஷிகண்டுமகிழ்ந்தோம்-அந்த
நேசிக்குங்கோதாவரிதுங்கபத்ராவில்நேர்மையாய்மூழ்கிவந்தோம்
நாசந்துலைக்கும் நர்மதாசரஸ்வதி
நதிசென்றுநாம் விதிசொஞ்சமும் பிசகாமலே புனலாடினோம்(வா)

தேசம்புகழும் திருப்பதிநாதர் தெரிசனங்களும்பெற்ற-மிக
நேசமாய்க்கண்ணப்பநாயனுர்க்கன்பாகநேத்திரமுங்கொடுத்த
காக்ஷியடைந்த காளாஸ்திரிநாதரின்
கனிவுற்றவ ரிதயந்தனில் அருள்பெற்றிட துதிபோற்றினேம்(வா)
சீராரும்பாலவனமுறைபாலீசர் சேவடியைத்தொழுதே-உடன்
நேராகவேமருதூரீசராலயம் நேசமுடன் துதித்தே
தீராவினைகளைத் தீர்த்தகன் பூந்திவ்ய
திருவுற்றிடுந் திருவொற்றியூ ருறைகர்த்தனைத் தெரிசித்தனம்(வா)
விண்ணவர்போற்றுந் திருக்கழுக்குன்ற வேதகிரீசரையும்-திரு
வண்ணமலையருணகிரியானையும் வேண்டியேயாவரையும்
திண்ணமாய்க்காக்குஞ் சிதம்பரந்தன்னில்வாழ்
தேவன்திரு நாதன்தனை ஏவந்தனித் தேவந்தனம்(வா)
மாயவரங்கும்பகோணம்ஸ்ரீரங்கமும்வாழ்விஜயனேசென்ருேம்கனி
வாயவ்விராமலிங் கம்வாழும் ராமேஸ்வ ரமுந் துதித்துவந்தோம்
நேயராமன்பர் நிறைந்தமாமதுரை
நிகரற்றிடும் பதிநித்தனை அதிபக்தியால் துதிசெய்திட(வா)

கிரு—அர்ச்சுனு! நாம் வந்து இதுநாள்வரை அநேக புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, திவ்யக்ஷேத்திரங்களையும் கண்டு தெரிசித்து, ஆனந்தமுற்ருேம். பூலோக கைலாயமாகிய இம் மதுரை யம்பதியின்கண் பக்தர்களை ரக்ஷிக்கும் பொருட்டு ஸ்ரீமீனும்பிகை சமேதராய் எழுந்தருளியிருக்கும் சாக்ஷாத் சோமசுந்தரக் கடவுளையும் தெரிசனஞ் செய்வதற்காக வந்திருக்கிருேம். நாம்வந்து வெகுகால மாகிவிட்டபடியால் சீக்கிரத்தில் தெரிசனஞ்செய்து, அன்னவர் அனுக்கிரகம் பெற்று, நம் தேசம் நாடிச் செல்வோம் வா.

அர்—கோபாலகிருஷ்ணு! அவ்வாறே செய்வோம்.

[இருவரும் வருகிறவழியில் வணிகச்செட்டியார் புலம்பிக் கொண்டிருப்பதை அர்ச்சுனன் கவனிக்கிருன்.]

வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

மங்காத மாலையணி மாதிதனைத் தானறிந்தால்
அஞ்சாமலேனது ஆவிதனைப் போக்கிடுவாள்
மங்காகி னீமணிம கேஸ்வரியிவ் வேளைதனில்--வருவாயே

வல்லாயு தாவென்முறை போல்குறையி லாதளக்க
இல்லாத தாலெனகம் நோகவுமின் ருகின்றதே
பொல்லாத ராணியல்லிக் கேதுபதி லோதிடுவேன் பரந்தாமா
முன்னளி லேழைசெய்த பாவபல னேவறியேன்
இன்னளி லேஎன்னுயிர் போகஎவர்சாபமோதான்
மின்னரைச்சேதனஞ்செயாயுதத்தாலேஎனையும் வதைப்பாளே

ஏ ஜெகதீசா! ஜெகத்ரக்ஷகா! அம்பிகா! இதுகால பரியந்தம் அனுதினமும் களமுத்துக்குக் குறையா தளந்து, அரசியினக்ஞை தவருமல் நிறைவேற்றிவந்தேன். இன்று ஒருபடி முத்துகுறைகின் றதே. அரசியாகிய அல்லியறிந்தால் அடங்காக் கோபம் கொள் வாளே. அன்றியும் ஆயுதத்தால் அங்கத்தைப் பிளந்து, அந்தகன் லோகத்திற் கனுப்புவாளே. யாதுபதில்சொல்வேன்! ஏ ஆபத்பாந் தவா! என் மனந் துடிக்கின்றதே. நெஞ்சம் பதைக்கின்றதே என் செய்வேன்! ஐயோ தம்பதிகளைப்பிரித்தேனே தவமுனியைப்பழித் தேனே, யாருடைய சாபமேற்பட்டதோ, எவருடைய கோபமுன் னிட்டதோ, என்னபாதகம் செய்தேனே தெரியவில்லையே எமீனம் பிகா! ஏ ஜெகாட்சகி ஒரு குற்றமுமறியாத யானிவ்வண்ணந் துன் புறுதல் நின் திருவுள்ளச் சம்மதமோ!

அர்—கோபாலா! இங்கு யாரோ சஞ்சலப்படுகிற சத்தம் கேட்கின் றதே! யாரென விசாரிப்போம்.

கிரு—அர்ச்சுனா! யாராயிருந்தால் நமக்கென்ன? நம்முடைய விஷ யத்தை நாம் பார்ப்போம். நாமேன் அதை அறியவேண்டும்.

அர்—கோபாலா! எந்தவேளையிலும் நொந்தவர் துயர்கேட்டு இடர் துலைப்பவனன்றோ வேந்தன்? அழுகிற குரலைக் காதிற் கேட் டும் நாம் விசாரியாது செல்வது நன்றல்லவே.

கிரு—இதுவென்ன சங்கடம்? சரி உன் இஷ்டப்படியே செய்.

## அர்ச்சுனன் செட்டியாரை விசாரித்தல்.

### விருத்தம்.

ஆரப்பா நீதான்மெத்த அலறியேயழுகின்றயெவ்
வூரப்பாநின்னிருப்பு உற்றதோர் துயரந்தன்னைத்
தீரப்பாநினக்குநேர்ந்த தீங்கதை யென்முன்சொன்னல்
பாரப்பாகாப்பேனென்பேர் பார்த்தனென்றறிவாய்நீயே

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

இப்படிப்புலம்புவதுமேன் உமக்
கெந்தவிதமானதுக்கம் வந்ததாலிந்தக்கலக்கம் (இப்)

அநுபல்லவி.

தப்பிதம்யாருக்கோ விளைத்து நிற்கலானீரோதிகைத்து
எப்படியானவிபத்து செப்புவீரெமக்கெடுத்து(இப்)

சரணம்.

அல்லியென்றொருபேரைச் சொல்லிநின்றழுதுவாயை
மெல்லுகின்றீரவளாரு விளைந்த இடைஞ்சல்விளங்க இயம்பும்(இப்)

அஞ்சவேண்டாமெங்களாலே ஆனவுதவியுமக்கு
வஞ்சகமில்லாமற்செய்வோம் வருத்த மிகுத்து நினைத்து நினைத்து()

ஐயா! உம்மைப்பார்க்கும் பக்ஷத்தில் நோய்முதலிய உபத்திர வங்களால் வருத்தப்பட்டவராகக் காணப்படவில்லை. ஏதோ மன வருத்தத்தினால் சஞ்சலப்படுவதாகத் தோன்றுகிறது. அவ்வாறு வருத்தமுறுவதற்குக் காரணம் என்ன? அன்றியும் அல்லியென் றோர் பேரைச் சொல்லுகிறீர்! அவள் யார்? விபரமாகச் சொல்வீ ரானால் உமது துயரை நீக்குகிறேன்.

செட்டியார் சொல்லல் கவி (தொஹைறா.)

உரையெனவேயென்முன்ன மோதிடுமுத்தமாளென்
குறைதனையகற்றப்போமோ கொற்றவா போவீர் நீரே

அர்ச்சுனன் சொல் தரு.

பஞ்சணைமீதினில் கொஞ்சிய ரதிகேள் என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

போவீரென்றெம்மைப் புகன்றிடலாகுமோ
போய்விடிலேஉமது ஆகுலம்போகுமோ
பொங்கரவமணிந்த மங்கையோர்பாகன்பக்கம்
போகவேண்டுமென்று லாகுமேன் கலக்கம் (போ)

## செட்டியார் சொல் கவி (தொஹைரு.)

கலக்கமேனெனவேவினவும் காருண்ய சீலரேநான்
துலக்கமாயுரைப்பேன் துன்ப மனுகிடா தருளுவீரே

## நொண்டிச் சிந்து.

மானகர்மதுரை யாளும் அம்பிகை
மீனாக்ஷியினருளாலோங்கி வாழும்

அல்லியென்றோரரசி உண்டு அவள்
ஆண்மையிலேமிகுந்தசமர்த்து முண்டு

கல்வியிற்கலை வாணி அழகுகண்ட
காந்தருவமாதும்மனம் நாணி

செல்லுவாளிந்திர லோகம் அலங்காரம்
சேயிழைசிகையோவிராறு பாகம்

உருவத்தில்ரதி யென்னலாம் அடிச்சிலம்பின்
ஓசையைக்கேட்டவருஞ் சின்னபின்னமாம்

நங்கைக்கா ரிணை யாமோ டேசன்
நாவினலழகைக்கூவவெளி தாமோ

ஆங்காரக்காரியவள் அண்டை
ஆண்வாடைசென்றாலதமாக் கிடுவாள்

களமுத்து அளப்பே னின்று குறைந்த
காரணத்தால்மனங்கலங்குகின்றேன் - இதுதானெனதுகுறை

அர்—செட்டியாரே! நீர் கவலையடையவேண்டாம். அவளுக்கு விவாகமாய் இருக்கிறதா ?

சே—இன்னுமாகவில்லை. ஆண்வாடையே ஆகாது.

அர்—உமக்கிப்பொழுது தரவேண்டிய தென்ன ?

சே—ஓர்படி முத்து குறைவாயிருக்கிறது. அது நிறைவாயிருக்க வேண்டும்.

அர்—கோபாலா! அவருக்கு முத்து குறையா திருக்கும்படி இது சமயம் தாங்கள் அனுக்கிரகம் பண்ணவேண்டும்.

கிரு—சரி அப்படியே அநுக்கிரகித்தேன்.

சே—ஆஹா இதுவென்ன ஆச்சரியம்! கனவா யிருக்கிறதே! சாக்ஷாத் கடவுள்தான் இவ்வுருவாக வந்திருக்கின்றதோ? எல்லாம் எனையாளும் ஈசன் செயல். ஐயா! நமஸ்காரம் இந்த நன்றி மறக்கமாட்டேன். நான் சென்று வருகின்றேன்.

அர்—செட்டியாரே! சென்று வாரும்.

## அர்ச்சுனன் தரு.

வலைதப்பிய குறமான்களே என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மைத்துனா இதுவென்ன ஆச்சரியம்-சிறிது
மனதிற்கொண்டேன் பொல்லா மாச்சரியம் (மை)

அநுபல்லவி.

சித்தமுந்துடிக்குது சினமிகப்பொங்குது
தேடிவிருதறுத்துச் செய்வோம்பங்கமெனது (மை)

சரணங்கள்.

ஆண்காற்றடிக்கவு மாகாதாம்-வந்தால்
அவள்கோபம் லேசிலேபோகாதாம்
சாண்பிள்ளையானாலு மாண்பிள்ளைமேலெனும்
சாரமறியாளை நேரிற்பார்க்கவேணும் (மை)

பொம்மைவிருதுகட்டி யாள்வாளாம்-இந்தப்
பூமிமுழுது மரசாள்வாளாம்
நம்மையும்மதியாமல் ராஜரீகம்செய்யும்
நாரிக்குமமதையேன் நீரேயோசனைசெய்யும் (மை)

எங்குமிகக்கேலி யாகுமே-சும்மா
இவளைவிட்டால் மானம் போகுமே
மங்கையாளா க்ரீட மானிலமாள்வது
மன்னுதிமன்னரா மணிமுடிதாழ்வது (மை)

கோபாலா! என்ன ஆச்சர்யம். உலகத்தில் அபலை யென்று சொல்லக்கூடிய பெண்ணாகப்பிறந்து, கல்வியினும், அழகினும், சாமர்த்தியத்தினும் மிக்க தேர்ச்சியமைந்த இந்நகரையே ஒரு குடைக்கீழ் அரசபுரியும் தன்மையும் வகித்து ஆண்வாடையண்ட

வொட்டாமல் தன் வீரமென்னும் துவஜத்தை நிலைநாட்டி, செங்கோல் நடாத்தும் அல்லியென்பவளை நினைக்க நினைக்க மிக்க வியப்புண்டாவதோடு, அவளை நேரில் பார்க்கவேண்டுமென்ற அவாவும் அதிகரிக்கிறது. என்னயோசனை செய்கிறீர்கள்?

கந்தார்த்தம் இராகம்-மோகனம்.

வீணனகர்வ மிசவேபொருந்தி வெகுவானராசர் அவமானமாக
ஆணைகாற்றும் அணுகாமலல்லி அரசேபுரிந்தாலதுகண்டுநாமும்
அடக்கிடவேணும் இல்லாவிட்டால்நீதியாகுமோகாணும்
மடத்தனச்சிறுக்கிமுன் வம்புகேலிகாட்டி
வளையாதகழுத்துக்குப் பெருத்ததாலிகட்டி (அட)

## கிருஷ்ண மூர்த்தி.

கந்தார்த்தம் இராகம்-மோகனம்.

பாடாதபாட லாடாதஆடல் பலபேதமான உலகாளுவோரில்
க்ரீடாதிகாரிஒருமாதுகொண்டகெருவந்தணிக்க அருளென்கிறாயே
கிடக்குதுவிசையாஇதுநாமெடுத்திட்டகீர்க்கும்வசையா
நடத்தும்யாத்திரைதான் தமக்குப்பெருத்தநீதி
இடத்துமதுரைக்குள்ளே இருக்குமொருத்திசேதி (கிட)

அர்ச்சுனா! பேஷ் நாம் வந்த காரியமென்ன, இப்போது நீ துணிவுகொள்ளும் விஷயமென்ன, நன்றாயிருக்கிறது? உன் சித்தத்தை இவ்வாறு சிதறவிடுவாயானால் நாமிதுவரையடைந்த புண்ணியங்களெல்லாம் வீணாகும். பயன்படாது மனம் போனபோக்கெல்லாம் போகவேண்டாம் செல்வோம் வா.

அர்—கோபாலா! அவளைப்பார்க்காது வந்தால் என்மனது ஒரு நிலையில் நில்லாது. அவளுடைய முகாரவிந்தத்தையாவது பார்த்துத்தான் வரவேண்டும். இது சத்தியம்.

கிரு—அர்ச்சுனா! பார்த்துவிட்டாவது வந்து விடுவாயா?

அர்—பார்த்தபின் வருவதற் கென்ன தடை?

கிரு—அர்ச்சுனா! இப்போது வன விலங்குகளை யேவிப்பயிர்களை அழிக்கச் செய்கிறேன். அப்போது அவள் வேட்டை யாட வருவாள். உடனே பார்த்துவிட்டு நீ வந்துவிடவேண்டும்.

3-வது சீன் மாளிகை.

# அல்லியரசாணி தர்பார்.

## தெய்வ வணக்கம்.

இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

உலகினுயிர் வகைவகையி லுறவினியவருளமுதமுதவுமானந்த சிவையே, உவமைசொல வரியவொரு பெரியசிவ னெறிதனையுணர்த்து பேரின்பநிதியே, இலகுபர வபரநிலையிசையுமவ ரவர்பருவமிய லுறவு ளங்கொள்பரையே, இருமைநெறி யொருமையுற அருமை பெறு பெருமைதனை ஈந்தெனையளித்த வறிவே, கடகரட விமல மய முகவமுதை யறுமுகவ கனவமுதை யுதவுகடலே, யலகில்வள நிறையுமொரு திருவால வாய்மேவு அன்பரக மகிழுமணியே அகில மொடுபுவிசரா சரமுமீன் றருள்பரசி வானந்தவல்லி உமையே.

## முருகன் துதி.

தாஜராஜ தாஜராஜ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாலவா பவானிபால னேவசீகரா திரு
வள்ளியுடன்தெய்வ யானை மகிழ்ந்திடுமாமனோகரா
வளமிகுசாமி மலையுறுமாறு வதனவிராறுகரா
வானவர் துணைவா மாதவாமுவா மால்மருகாதீரா
வந்திடுஉந்தனின் சிந்தைகளிந்தரன் மைந்தனே இதுவேளை
வரமெனக்கருள்வாய் சரவணபவனே மலரடிபணிந்தேனே
மலரடி பணிந்தேனே மலரடிபணிந்தேனே (வே)

## நடன மாதர்கள் டான்ஸ்.

இராகம்-புது இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்னர் மன்னவர்பணியும் மாதேமாமலராணியும்
அன்னம்போல் நடையுடை அன்னையேபூவுலகை
ஆதரித்திடுமரசி பாதம்வாழ்த்தினஞ்சரசி
அஞ்சாமல் வஞ்சகர் நெஞ்சைப் பிளந்திடும் (மன்)

சேமம்தங்கியபாணி செய்தோர்துதி மகராணி
பூபாலிதயைபுரி திருக்கருணைகரியே
போற்றிநேமரசிபுகழ் சாற்றிநேமிதசமயம்
போதவே ஆசிகூர் (அல்லி) கல்யாண், கல்யாண், கல்யாண்!

---

## தேசவிசாரணை.

இராகம்-டான்ஸ்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மந்திரிகள்:—வந்தனம் தந்தோம் மகராணி
வந்தனம் தந்தோம் மகராணி

அல்லி:— கல்யாண் கல்யாண் மந்த்ரிகளே
தேசங்களின் சேதிகளை ஓதிடுவீர் எந்தனிடம்

பார்ஸி வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஏகம்.

அல்லி:—தேகத்தினில்வலி மேவிச்சமர்புரி
சேனைக்கதிபதி செங்கமலம்
சீருற்றிட அதி பேருற்றிடகிலே
சேரப்புகலமர் கொண்டநலம்

சே:—அம்மணீ! என்விஷயத்தில் தங்களுக்குக் கிஞ்சிற்றேனும் கவலை வேண்டாம்.

அல்:—கல்யாண் மிகவும் சந்தோஷம்.

அவனியில் யாரேனும் என்றமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ராயசம்ரத்திநம்பாள் நமதுமுத்திரைவைக்கும்
ஞாயமெதுவுமுண்டோ நவிலுவாய்விரைவினில்

ரா:—அம்மணீ! என் விஷயத்தில் கவலை வேண்டாம்.

அல்:—மிக்க சந்தோஷம்.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மந்திரிபவளசேனு வார்த்தைசொல்லடி
இந்த நகரிலி ருந்துபிரஜைகள்
எந்தவிதமாய் நடந்துவருகிறார் (மந்)

பவளசேனு! நமது ராஜ்யத்தின்கண் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வர்ணத்தார்களும் அவரவர் தொழில் களைச் சரிவர நடத்தி வருகின்றார்களா? மாதமும்மாரிபெய்து நகர் செழிப்புற்று பிரஜைகள் எல்லாம் யாதொரு குறைவின்றிச்சந்தோஷத்தோடு செழிப்பாய் வாழ்ந்து வருகின்றார்களா?

பவ—அம்மணீ! சாக்ஷாத் ஸ்ரீ மீனும்பிகை சமேதராய் விளங்கும் சோமசுந்தரக்கடவுளின் திருவருளால் மாதமும்மாரி பெய்து நாடெல்லாம் செழித்து, பிரஜைகள் யாதொருகுறைவின்றிக்களிப்புடன் வாழ்ந்து வருகின்றனர். நான்கு வருணத்தார்களும் தங்கள் ஆக்கினையின்படி சரிவர அவரவர்கள்தொழிலைநடத்திவருகின்றனர்.

அல்—கல்யாண்! அதென்ன சத்தம்

## குடிகள் வந்து புலம்பல்.

தந்தானமடி தந்தானமடி என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அம்மா எங்களாலாகாதுஇது யாரோசகித்திடுவார்
ஆவிதுடித்திடத்தாவிமிருகங்க ளோடிவருகுதம்மா(அம்)

பொல்லாமிருகமெல்லாம்பயிரைப் பற்றியழிக்குதம்மா
போசனத்தால்பிரயாசையடைந்தது போகுதேவீணுயம்மா(அம்)

காட்டானைபெருங் கூட்டாகமதங் காட்டிவருமோசை
கேட்டோமேதிடுக்கிட்டோமேக்ஷண மோடிவந்திட்டமம்மா(அம்)

அம்மணி! தங்கள் நாட்டினிடமாக நாங்களிட்ட பயிர்களையும், மற்றுமுள்ள வாவி, தடாகம், சோலை, நந்தவனம் முதலியவைகளை

யும் காட்டிலுள்ள கொடிய விலங்கினங்கள் அழித்ததோடு எங்களை யும் தும்சம் செய்கின்றதை எவ்வாறுரைப்போம் அம்மணி!

### அல்லி தரு.

சிங்காரச்சோலையலங்காரம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஆதி.

அஞ்சிடவேண்டாமந்தக் காட்டி
லணைவருஞ்சென்றுகணை பூட்டி
குஞ்சரத்தோடுபலங் காட்டி
குடிகளின்குணத்தைப்பா ராட்டி

பஞ்சாகவேமிருகக் கோட்டி
பதைத்திடவே மாட்டி
பலத்தைநிலை நாட்டி
பயமதனை ஓட்டி-நான்
பாவிப்பேனேபெரு மாட்டி (அ)

குடிகாள்! பயப்படவேண்டாம். இப்பொழுதே சென்று அக் கொடிய விலங்கினங்களைத் தும்சம்செய்து, உங்களைக் காப்பாற்று கின்றேன். அச்சமின்றி உங்கள் எதாஸ்தானம் செல்லுங்கள்.

கு—அம்மணீ! அப்படியே நமஸ்காரம்.

அல்—கல்யாண்! சென்று வாருங்கள்.

### அல்லி தரு.

தும்ஜாதீதுமுஜ்பர்க்குர்பான் என்ற வர்ணமெட்டு.

தாதியேசெங்கமலம் இங்குவாடி
சாற்றுவேன்மிக்கநலம் நாம்
கூடியேஓடிநின்று விலங்குகள்
கூட்டமனைத்துங்கொன்று வரமிக

வேகமாய்ச்சென்றிடுவோம் கத்தியினால்
வீசியெறிந்திடுவோம் (தா)

வேங்கையொடு சிங்கமும் வெம்பியே வாட
வீறிட்டவ ஞோடிட வேங்கைக ளாட
மெச்சவே இச்சண மேசெல்லுவோம்
கச்சித முச்சித மாய்வெல்லுவோம்

## தோழிகள் தரு.

பார்ஸி மெட்டு.

அம்மணி நாங்களடி பணிந்தோம்
அம்மணி நாங்களடி பணிந்தோம்
அம்மணி நாங்களடி பணிந்தோம் (தாநி)

தோழிகாள்! குடிகளுக்கு நேர்ந்த இம்சையை நீக்குவதற்கு நாம் இப்பொழுதே வேட்டையாடச் செல்லவேண்டும். வேடுவ ஜாதிப் பெண்மணிக் கூட்டங்களை அதி விரைவில் வரும்படி உத்திரவுகொடுத்து நீங்களும் உடனே அதற்காக வேண்டிய,

இராகம்-பார்ஸி-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வில்லம்பு கத்தி கட்டாரி ஈட்டி வேல் வாளாயுதங்கள்
வெடி வளைதடி வெற்றிக்கொடி யாவையுங்கொண்டு

வா சே னாதி பதி

சிறுவலை பெருவலை மறுவலையும்
சிட்டொட்டு வைத்துப் பிடித்திடுவலையும்

சென்னாய் சுறுநாய்களும் சேகரித்ததி விரைவாய்
வனவேட்டையாடப் போவோம் போவோம் போவோம்
இரும்புக்குண்டுசூலங்கள் எடுத்துக்கொண்டுவாருங்கள்
மருப்புப்பற்றித்தேடுங்கள் வதைத்துக்கொன்றுபோடுங்கள்

அல்—தோழிகாள்! சேடியர்காள்! சீக்கிரம் வேட்டைமுஸ்தீப் போடு அதிஜாக்கிரதையாகப் புறப்பட்டு வாருங்கள்.

## 4-வது சீன் மதுரைமாநகரம்.

## அல்லி வேட்டைமார்க்கமாக வருதல்.

---

[வேட்டைமார்க்கமாக வரும் அல்லியை அருச்சுனனுக்குக் கிருஷ்ண மூர்த்தி ஓர் மறைவிலிருந்து காண்பிக்கின்றார்.]

---

### அர்ச்சுனன் தரு.

அற்பக்குணத்து லீலாவதியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மெல்லிடை அல்லிதனைக் கண்டேன் அவள்
மீது ஆசைமிகக்கொண்டேன்
வெல்லுவதெந்தவிதம் சாமி வினயமாய்ச்சொல்லினேநேமி
மேலுமிந்தப்பூமி தனிலேஅந்தவாமி
தனைப்போலும் பார்த்ததில்லைசாமி (மெ)

கண்ணில்-பார்க்கத்தகுந்த இந்திராணி இந்தப்
பாரோர் புகழும் அல்லிராணி
பரிமளகல்யாணி பசுந்துதரும்வேணி
என்-பங்கில் கிடைத்திடுமோபேணி (மெ)

வேட்டைதனக்குச் செல்லுமாது செய்யும்
வேடிக்கைக்கே இணையேது
வேண்டும்புவிமீது தீண்டக்கிடையாது
இந்த-வேளை எனக்கேயவள்தோது (மெ)

ஆஹா! என்ன காந்தி, என்னஜோதி, என்ன அழகு, என்ன வீரியம், என்ன ஒய்யாரம், என்ன பராக்கிரமம், ஷகபாஷ் மைத்துனா! கோபாலா! பூவுலகத்தின் கண்ணே இவ்வாறாகவும் பெண்கள் ரத்தினம் இருக்கின்றதா?

கிரு—அருச்சுனா! அவள் ரத்தினமாயிருந்தால் என்ன? மரகதமாயிருந்தால் என்ன? பார்த்தாய்விட்டதல்லவா? இனி நாம் போவதற்குத் தடையில்லையே? வா புறப்படுவோம்.

அரு—கோபாலா! நாம் போவதற்கு இப்போது நீருரைத்த வார்த்தையி லொன்று குறைவா யிருக்கிறது.

கிரு—அர்ச்சுனா! குறைவா? அதென்ன குறை?

அரு—மைத்துனா! பார்த்தாய்விட்டதல்லவா? என்றீரே. அந்த வார்த்தையில் விவாஹமாகிவிட்டதல்லவா? என்ற குறை இல்லாமல் ஜதையாய் இருக்கவேண்டுமல்லவா?

கிரு—பேஷ் மெச்சினேன். நானும் வேலையில்லாது உன்னுடன் தீர்த்த யாத்திரைக்கு வந்தேனே! என் மடத்தனத்திற்கு நீ என் செய்வாய்? அருச்சுனா! இப்படிப்பட்ட கெட்ட எண்ணங்களெல்லாம் வேண்டாம். போவோம் வா.

அரு—கோபாலகிருஷ்ணா! என்ன இவ்வாறுரைக்கின்றீர்கள்?

---

சேந்தின்மாநக ரந்தனில் மேவிய என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அரு—மங்கையா ளல்லியை மணஞ்செய்யாமல்
மாயவனேவர மாட்டேன்-வந்தால்
நானுயிர் மீளவு மாட்டேன்-உயர்
மாதுபங்கனும் வேதனுந்திரு மாதவர்புக ளோதுமிங்கித (மங்)

கிரு—தீர்த்தயாத்திரை செய்யவந்தோமிந்தத்
தீவினையெண்ணிட லாமா-எண்ணில்
சேரும்பவம்வீணில் போமா-உந்தன்
சேதியிப்படி யேயிருக்குது நாணெடுத்தது வோமதிக்குறை (திரு)

அரு—தந்தைதாய் குரு தெய்வமும் நீயேயத்
தையலைநான்மேவி நாட-மணம்
செய்துவையுன்னைக்கொண் டாட-இந்திர
ஜாலமேனுயிர் போகுதேயத னுலருளுவை மாதவாஇனி (மங்)

கிரு—தர்மராஜனும் பீமனுமற்திரு
தம்பியருமங்கை மாரும்-உந்தன்
தாய்முதலானஎல் லோரும்-மெய்
தான்வருந்துவர் நாமும்வந்ததி நாளடைந்தது வாநடந்திட (தீர்)

அருச்சுனு! வருகின்ருயா இல்லையா? நான் போகிறேன்.

அரு—கோபாலா! எந்த விதத்திலாவது என்மீது கருணைகூர்ந்து, அல்லியை எனக்கு மணமுடித்து வைப்பது உமது கடமை. அப்படி முடித்துவைத்தால் நானுயிருடன் வாழுவேன். இல்லையேல் மன்மதன் கணையினுல் உயிரிழப்பேன்.

கிரு—அருச்சுனு! இந்த எண்ணத்தை விட்டுவிடு. நாம் தீர்த்தயாத்திரை செய்யவந்து, அவ்வெண்ணத்தை உள்ளத்திற் கொள்வது தகுதியோ? நீயே யோசித்துப் பார்! எழுந்திரு செல்வோம் வா. நீ என்ன ஒன்றும் அறியாதவனு!

அரு—கோபாலா! அல்லியை மணமுடித்து வைத்தால் வருகின்றேன். இல்லையேல் இந்திரப்பிரஸ்தஞ் சென்று, என் தாயார் தமயன்மார் முதலானவர்களிடம் 'அருச்சுனன் மதுரையில் அல்லியென்பவளை விவாஹம் பண்ணுமல் வரமாட்டேனென்று சொல்லிவிட்டான்'' என்பதாகச் சொல்லிவிடும். நான் மணமுடிக்காமல் வருகிறதில்லை.

கிரு—இதுவென்ன சங்கடமாய் வந்து சேர்ந்தது. இவன் மனதை இலகுவில் திருத்தமுடியாது. சரி அருச்சுனு! எழுந்திரு "நீ பிடித்த முயலுக்கு மூன்றேகால்'' என்று சாதிக்கின்ருய். நான் சொல்லுகிற பிரகாரம் செய்.

மருவேசெறித்த குழலார் என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-அடதாளம்.

கண்ணிகள்.

விஜயா விருண்ட குழலாள் முனிந்து<br>வருவாள் விலங்கை — வதையாட

வனமேபுகுந்து மனதாயிருந்து<br>மகடீக்குகந்து — வருவாயே

சிறுமீதொடுக்கு மயிலாஞ்சரத்தைத்<br>திறமாயெடுத்துச் — சடையாமல்

சணமேகொடுக்கச் சரியாயகத்தைத்<br>திடம்நீபடுத்திச் — செலுவாயே

கோ—அருச்சுனு! இப்போது நான் சொல்கிறபடி செய்தற்கு,

நாச்சோகாணுநாச்சோகாணு என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சென்றுவாநீ சென்றுவாநீ
சென்றுவாநீ அல்லிகணை
யாழிகொண்டுமற வாமல்வரச் (செ)

அருச்சுன! எவ்வாறு செல்லவேண்டும் தெரியுமா?

தொண்டுகள்செய்யுந் தோழிகளைப்போல்
சுந்தரனேவெகு தந்திரமாய் (செ)

அவள் விரலிலணிந்துள்ள அக்கணையாழியைக்கொண்டு,

வந்தாலல்லியை மணம்செய்துவைப்பேன்
வார்த்தைபிசகிடேன் பார்த்தீபனே (செ)

அரு—கோபாலகிருஷ்ண! அவ்வாறே செல்கின்றேன்.

---

## 5-வது சீன் அடர்ந்தகானகம்.

# அல்லியரசாணி வேங்கையாடுதல்.

---

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வில்லைவளைத்தம் பெய்திடுவேன்
வேங்கைபுலிகளைக் கொய்திடுவேன்
கொல்லுவிலங்கின மாய்த்திடுவேன்
குடிகளினல்குறை தீர்த்திடுவேன்
போகுதுபோகுதோர் சிங்கம்-இனிப்
போயதனைச்செய்வேன் பங்கம்
வேகமாய்வரும் யானையின்சங்கம்-அவை
யாவுங்காக்கை களுக்கேசங்கம்
இரையாக்கிவிடுகிறேனிதனங்கம்இரையாக்கிவிடுகிறேனிதனங்கம்()

அஞ்சாதநெஞ்சமுள்ள ஆண்பிள்ளைச் சிங்கம் என்ற மெட்டு.

கண்ணிகள்.

புள்ளிமான் வேகமதாய்ப் போகுதடியங்கே-அதன்
புறமாய்ச்சென்று கதிபிற்கொன்று
திறமாச்சென்று வருவேனின்று (புள்)

அஞ்சாமலோடுதடி ஆற்றங்கரைநாடி
அடுத்துக்கணையைத் தொடுத்து அதனைத்
தடுத்துஉயிரைக் கெடுத்துவருவேன் (அஞ்)

---

[வேட்டையாடிக்கொண்டிருக்கும் அல்லியை அருச்சுனன் மறைவாய் இருந்து பார்த்துத் தனக்குள் ஆசையுறுகிறான்.]

இந்தமங்கையார் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

அல்லிமணிபோல் அவனியிலெங்குங்காணேன்—நான் (அல்)

அநுபல்லவி.

துள்ளிடுமீன்போல் துலங்கிடும்விழியாள்
சோலையில்வாழும் சுவாகதமொழியாள்
சுந்தரமயிலாள் கந்தரக்குழலாள்
தோகையிவளெந்தனுட சோகத்தையகற்றுவாளோ (அல்)

ஆ! என்ன நானிவ்வாறுகவே நின்றுகொண்டிருந்தால், என் எண்ணம் நிறைவேறுதாகையால் கோபாலகிருஷ்ணனுடைய உத்திரவுப் பிரகாரம் பேடிவேடம்பூண்டு, இவளுடன் திரியும் தோழிகளோடு அம்புகளைப் பொறுக்கிக்கொடுத்து, எப்படியாவது அவளுடைய கணையாழியைக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கவேண்டும்.

[பேடி வேடம் பூண்ட அருச்சுனன் தோழிகளோடு அம்புகளைப் பொறுக்கிப் பொறுக்கி அல்லியிடம் கொடுத்துக்கொண் டிருக்கிறான்.]

## வேட்டையாடி அல்லி களைப்படைதல்.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

களையுமாகுதே சகி களையுமாகுதே சகி (களை)

அநுபல்லவி.

களையைப்போக்குடல் உளையுதெந்தன
காலைப்பிடியடி சகி காலைப்பிடியடி—சகி (களை)

அல்லி—சகி! உக்ரமத்தோடு வேட்டையாடியதால், களைப்புண்டாகின்றது. ஆலமரத்தின் சப்ரமஞ்சத்தில் சயனிக்கின்றேன். சற்று காலைப்பிடி.

அரு—கோபாலா! இதுவுமெனது பாக்யந்தான். "கண்-இதென்ன மோசம் வந்துவிடப் பார்த்ததே! அம்மணி என்றழைக்கப் போனால் கண்மணி என்று வருகிறது" அம்மணி நாமெவ்வளவு கஷ்டப்பட்டோம்? களைப்பு இருக்கத்தான் செய்யும். நான் கால் பிடிக்கிறேன். சயனித்துக் கொள்ளுங்கள்.

அல்லி—சகி! இனிமையான ஒரு கதையும் சொல்லு.

அரு—சொல்லுகிறேனம்மணி!

## நொண்டிச் சிந்து.

நீர்நிலவளமுடைய, நல்ல நிகரற்ற இந்த்ரபிரசித்தமென்னும், ஓர்நகர் வடக்கேயுண்டு, அதனை உரிமையாயாள்பவரைவருண்டு, குருகுலமரபினர்கள், குந்தியின் மைந்தராம் பாண்டவர்கள் ஐவர்களில், தருமன் பீமன் அருச்சுனன், இவர்கள் தம்பியாம் நகுலன் சகாதேவன், இவர்களிலருச்சுனனும், திரோபதையை எட்டாத வில்வளைத்து மாலைமுடித்தான், ஆணில் மிகுந்த அழகன், அவன், ஆதிவேதத்தை முற்று மாய்ந்து பார்த்தவன, காணிப் பெண்ணாகக்கொண்டவன், உயர்-கருணைக்கடலென எண்ணத் தக்கவன், உனக்குமிசைந்தகணவன், அம்மா. அம்மா, உனக்கு மிசைந்த கணவன், அவன் ஒருவனே அழகினில் உயர்வுடையான்(நீ)

பாசுபதம் போலமதன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அல்லியரசாணியெனும் அழகுபைங்கொடியே
கதை அறைகுவே னடியேன்

ஆதியில் துருவாசமந்திரம் ஐந்தினாலேயே
அம்மா ஐந்தினாலேயே

தருமர்வீமர் அருச்சுனன்முதலைவர்கள் பிறந்தார்
அம்மா ஐவர்கள் பிறந்தார் அவர்

தனயர் நகுல சகாதேவர் தானேபிறந்தார்
அம்மா தானேபிறந்தார்

அவர்களில்நடுப்பிறந்தோனை அருச்சுனனென்போன்
அவன் அழகிலேசிறந்தோன்

அரிவையரைப் பிரியத்துடன் அணையுமன்மதன்
அம்மா அணையுமன்மதன்

சிங்கம்போல்நடையுடையான் சிறந்தமேனியான்
அழகு சிறந்தமேனியான் அந்தத்

தேர்விஜயனைத் திருமணஞ்செய்து சேர்வதேநலம்
அம்மா சேர்வதேநலம்

முன்னழகும் பின்னழகும் பேரழகுமுள்ளோன்
மச்ச-ரேகையுமுள்ளோன்யார்க்கும்-பிரியமாயுள்ளோன்

அவன்பால்-பேசுவாயானால்மாசிலா அருள்பின்பற்றிவிடுமே
அம்மா பின்பற்றிவிடுமே.

கதையுரைக்கக்கேட்ட அல்லி, ஆங்காரத்துடன் எழுந்து, அருச்சுனனை விரட்டுகின்றாள். ஓடுகின்றான்.

இந்துஸ்தான்-நோட்டு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆரடா ஆரடா ஆரடா ஆரடா ஆண்பிள்ளை இங்குவந்தாய்
ஆண்வாடையாகாத அல்லியென்று அறியாயோடாஎங்குசென்றாய்

177309

ஈரேழுலகத்திலெங்குநீசென்றாலு மிட்டுவந்துன்னையேநான்
இருபிளவாகப் பிளந்துமெமனி— லோகமனுப்பிடுவேன்
ஆங்காரமானவென் அக்கினிக்கேயுனை யாக்கிவிடுவேன்விறகாய்
அச்சமில்லாமலே கொச்சைக்கதையைநீ யாரிடங்கூறவந்தாய்

அடா! துஷ்டா! என்ன தைரியம்?

அஞ்சாதே அஞ்சாதே மந்திரவாதி என்ற வர்ணமெட்டு.

தோழிகள் தரு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

177309

கண்ணிகள்.

வீராவேசத்துடன் வேலினைத்தாங்கி
வேகமாயவனெங்கே என்றதையோங்கி
கோரமாய் நிற்பதென் காரணம் ராணி
கூறிடுமெங்கள் குணங் கொள்கல்யாணி

அம்மணி! என்ன நடந்தது? ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்? அடங்காக் கோபத்தோடு நிற்கின்றீர்களே?

அல்லி—அடி! நீங்களெல்லாம் எங்கு சென்றிருந்தீர்கள்?

இராகம்-பார்ஸி-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாங்கியே செங்கமலம் இங்குவா
பகருவேனுன் கோலம்
பாதக—னவ—னொடியே—எந்தன்பின்
பற்றிவந்த சபலம்
ஆணைப்பிறந்தவண்டி அவனதி
ஆங்காரமுள்ளவண்டி
அஞ்சாமல்—நெஞ்சந்—துணிந்து—வந்தவனை
அண்டிவதையுங்கடி
காதும்பிடித்தாண்டி கெட்ட கெட்ட
கதையுமுரைத்தாண்டி
காட்டினி—லெங்கு—சென்றாலு—மவனைக்
கண்டுபிடியுங்கடி

177309
O-1-2 M.N.A.P. 1923

அடி யாரோ ஒரு திருட்டுப்பயல் பெண்வேடம்பூண்டு வந்து, என்னுடைய காலைப் பிடித்ததன்றியும் சொல்லத்தகாத கதையையும் சொல்லிவிட்டான். இதோ இவ்வழியாகத்தான் சென்றான். சீக்கிரம் அவனைப் பார்த்துப் பிடியுங்கள்.

தோ—அம்மணி! தங்களண்டை ஆண்பிள்ளை வருவதென்றால் அசாத்தியமாயிற்றே? இந்தவனத்தில்வாழும் தேவதைகளாய் இருக்கலாம். அல்லது கனவுகண்டாலும் கண்டிருப்பீர்கள்.

அல்லி—அடி! தேவதைகளாவது, கனவாவது. தேவதைகளென் முன்வருமா? கனவென்றால் எனக்கு உணர்வற்றாயிருக்கிறது?

தோ—அம்மணி! அப்படியல்ல. நாங்கள் தெரிவிப்பது போலத் தானிருக்கும் என்று நினைக்கிறோம்.

அல்லி—அடி என்ன! மறுபடியும் அவ்வாறே தெரிவிக்கின்றீர்கள்? சீக்கிரத்தில் நீங்கள் கண்டுபிடிக்கவேணும். தவறினால் உங்களைத் தகுந்தபடி சிட்சை செய்குவேன்.

தோ—அம்மணி! தங்களிஷ்டப்படியே அவனைத் தேடிப்பிடிக்கிறோம். ஆனால் இப்பொழுது இங்கு இருக்கக்கூடாது. நகரத்திற்குச் செல்வோம் வாருங்கள். அங்கு சென்று இரகசியமாகவே அதற்குவேண்டிய வேவுக்காரர்களை நியமித்துப் பிடித்துவரும்படி செய்து தகுந்த தண்டனை விதிப்போம்.

நகரத்திற்குச் செல்கின்றனர்.

---

## 6-வது சீன்.

# மதுரைமா நகரின் ஓர்பாகம்.

---

கோபாலகிருஷ்ணனும், அருச்சுனனும்.

அரு—மைத்துனா? கோபாலா! உமதாக்ஞையின்படி சென்றேன். மிகுந்த கஷ்டமடைந்து, இதோ கணையாழியைக் கொண்டு வந்து விட்டேன். பாருங்கள். இது முத்திரைக் கணையாழி.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

கல்யாணஞ்செய்துவையுமே கண்ணபிரானே (கல்)

அநுபல்லவி.

அல்லிக்கம்பு பொறுக்கும் பெண்போலவேநடித்தேன்
அவள்களையானபோது காலையும்பிடித்தேன்
நல்லகதை என்றுமென் வரலாற்றைப்படித்தேன்
நங்கையாள்சினங்கொள மனமிகத்துடித்தேன் (கல்)

ஆலிங்கனம் செய்தேன் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

கருங்குழலல்லிமாதின் கணையாழிகொண்டுவேகம்
வருகிலுன்மனப்படிக்கே மணமுடித்திடுவேன்என்ற
கண்ணுஎன் காரியத்தை எண்ணுமல்
போனுலன்ன முண்ணோனே
கஞ்சப்பூப் பாதாப்ர பஞ்சத்தைக் காத்திடும் (கண்)

உருவிலிகணையாலெந்தன் னுடம்பெலாமுருகிவாடி
வருந்துமென் துயர்தீர வள்ளலேகருணைசெய்வீர
உம்மாணை உலகுண்டபெம்மானே
உத்தமியாம் அம்மானை
உள்ளங்க னிந்து மனமுடித்துவையும் (கரு)

ஆயேசையா என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

மாதவனே மங்கையாளல்லிதன்னை
மணமேசெய்ய நானே
சீதாராமா என்மேல்தயவு செய்யும்
சேயிழையைத் தாலிகட்டி வையும்

கோபாலா! இனியாவது தாமதமில்லாமல் என் எண்ணத்தை நிறைவேற்றப் பிராத்திக்கிறேன்.

கிரு-அருச்சுனு! இன்னும் உன்னாலாகவேண்டிய தொன்றிருக்கிறது.

ஜப்தகலந்தரு என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தனஞ்சயனே இப்போது தாங்கமுடியாத்தண்ணீர்
தாகமதிகமெனக் காகுதே
தாகத்தாலாகுஞ் சோகத்தைத்தீர்க்கச்
சடுதியிற்சலங்கொண்டு தருவாயே
தந்திடிலோ உந்தன்மீது சிந்தைகனிந்து
தையலல்லியைமணஞ் செய்துவைப்பேனுன்
சங்கடமில்லாமலிந்த வேளைதனிலே (தன)

கிரு—அர்ச்சுனு! தாகமதிகரிக்கின்றது. அதி சீக்கிரத்தில் ஜலம் கொண்டு வரவேண்டும்.

அர்—கோபாலா! இதோ சென்று கொண்டு வருகின்றேன்.

கிரு—இவனே அல்லி என்னும் ஆசைவலையில் அகப்பட்டவனு யிருக்கின்றுனுதலால் தடாகத்தண்டை இவன் செல்வதற்கு முன் அல்லியினுருவைப்போல் ஓர் படத்தில் நியமித்து, அப் படத்தின் நிழல் தண்ணீரினுள்தோன்றும்படி அங்கு நிற்கும் மரத்தில் கட்டிவைத்து, "இவன் என்னசெய்கின்றுன்" என்று பார்ப்போம். இவனுக்குப் பைத்தியம் பிடிக்கும்படி செய் விக்க வேண்டும். அப்பொழுதுதான் இவன் அடங்குவான்.

**தண்ணீர் கொண்டுவரச் செல்லும் அர்ச்சுனன் அல்லியை நினைத்துக்கொண்டே செல்கிறுன்.**

டாரேநாமமுகம்மது என்ற வர்ணமெட்டு.

இராகம் - நாதநாமகிரியை - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

இவளைப்பார்த்தமுதலை யென்மனமிகப் பாரிலேங்குதே
இருநேத்திரத்திற் குள்ளாயிருந்தவள் நினைப்புண்டாகுதே
அவள் அன்னநடைமேல் மின்னலிடைமேல் ஆவலாகுதே

## 7-வது சீன்.

# நந்தவனம் குளக்கரை.

தண்ணீரிலுள்ள அல்லியினுருவைக்கண்ட
அருச்சுனன் அதனோடு பேசுகின்றான்.

தேடித்தேடி என் தங்கையை என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நேசியல்லி நீரில் வந்து நிற்கின்றாய்
நேராயெனைப்பார்க் கின்றாய் (நேசி)

அநுபல்லவி.

காசினியில்உன்னைப்போல் காணேனடி—நான்
கண்டதுமுதலொன்றும் தோணேனடி (நேசி)

சரணங்கள்.

மாதேநீயிங்கேஓடி வருவாயே—மன
வாதனையணுகாமற் செய்வாயே
சேயிழையேயங்கம் நொந்தேனே—செழுந்
திங்கள்வதனியாசை கொண்டேனே
சிருசிறந்திடு மீடுசெங்கோலைத்
தாங்கியற மோங்கிவளர்த்திடும் (நேசி)

சோதிசுந்தரசொரூபம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

திங்கள்தனைப்போற் சொலிக்குஞ்
சிங்காரியே நிறை (திங்)

அநுபல்லவி.

அங்கந்தனி லெங்கும் மங்காத்
தங்கந்துலங்கி விளங்கிடு மங்கையே (திங்)

சரணம்.

சித்திரமொத்தமுகத்தையுடைத்த சிங்காரி - திவ்வியமாக
நத்துமெனைத்தினமுற்றிடுமுத்தமி நாரி - அலங்காரமாக
சுத்தஜலத்தினகத்திலிருக்கும் உதாரி - சுந்தரியோநாம்
பத்திமிகுத்து வசித்திடலோ சுகவாரி - நிறையுஞ்சக்ரக்

குடையுடையாளே கொஞ்சிநீதாக
விடையதுதீர்த்திட வஞ்சமேலாகத்
தடையுரையாமல் வாதயவாக
உடையார்பதம்பாடி நாமுறவாகத் (திங்)

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரிகை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மங்கையே உன் அங்கத்தைக்கண்டு
மனமருண்டு நினைவுகொண்டு
மன்னன்யானும் வந்ததுமுண்டு—அடி
வஞ்சியே யபரஞ்சியே ஆசைமிஞ்சியே யுனைக்கெஞ்சுரேனடி
மாதேஎன்மேற் கோபங்கொள்ளாவே
மந்திரங்கற்ற தந்திரக்காரி வாதுஎன்முன் செய்வதாகாதே (மங்)

என தாசைக்கினிதாகிய கண்மணி! நன்மணியணிந்த பெண் மணி! உன்வாயினாலொருவார்த்தைபேசலாகாதா? இவ்வாறுபேசா மவுனஞ்சாதிக்கிறாயே! உனதுமன மென்ன கல்லா, கடிதா, இரும்பா? ஏ பெண்கள் நாயகமே! அனங்கனானவன் என்மீதாங்கா ரங்கொண்டு, என் அங்கங்கலங்கி அறிவுமயங்கித் தியங்கும்படி தன் செங்கரும்புவில்லில் கொடிய தங்கப்பத்திரத்தைப்பூட்டிப்பிர யோகித்து, என்னைப்பங்கப்படுத்துகிறான். கங்கைக்குள்ளிருக்குந் தங்கமே பங்கயமொத்த உன் செங்கரத்தையீந்து என் வேதனை தீரும் வழியைக் காட்டு. அடி வஞ்சியே கொஞ்சம் உதவிபுரிந்தி டில் நெஞ்சமஞ்சாது அப் பஞ்சபாணனோடு கொடுஞ்சமர் புரிந்து, இச்சஞ்சலத்தைப் பஞ்சுபோற் பறக்கச்செய்கிறேன. அஞ்சுகமே! மிஞ்சியசோகத்தால் கெஞ்சுமென் சஞ்சலமகற்ற வருவாய்.

மானேயங்கே போனவகையேன்னடி என்றமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மானே மருளானேனடி மயிலே-சுக
வாசமலரணி தேசுமிகுகுழல் (மா)

அநுபல்லவி

தேனேமொழி தித்திக்குங்கற்கண்டே
திடமாகவெனிடமேவரத் தடையேனொருவிடைதாமட (மா)

சரணங்கள்

எண்ணிலாதசுகமுன்னாலடையேனோ எந்திழையேநானே-கோடிப்
புண்ணியமுண்டடி என்னை மணந்திடில் பூவையேநீதானே
வண்ணமுடையாளே வாய்திறவாயோடி
வா சித்தினி ஜாதிக்குயி லேஉத்தமி யேயித்ததி (மானே)

தண்ணீர்க்குள்ளேயொளிர் மின்னலைப்போலவே
தங்கும் அல்லிமாதே-மன
மின்னுமிரங்காமல் சொன்னதுங்கேளாம லென்னைவருத்தாதே
கன்னியேமுன்செய்த புண்ணியத்தாலேயிக்
காலந்தனிலேயுந்தனைக் காணும்படியாய்வந்தனன் (மா)

அல்லி! உன்னைவிடேன். இதென்ன நாம் சென்று பிடிக்கப் போனால் மறைந்துவிடுகிறாள்? இத்தடாக மெங்குந் தேடியும் ஜல ஜெந்துக்கள் அகப்படுகின்றதேயன்றி வேறொன்றுங் காணோம். இதோ வந்துவிட்டாள் என் கண்மணியான அல்லிராணி!

உத்தமியேநவரத்தினமேமன மொத்துவருவாயே-நான்
கத்தியழைத்துங்கேளாதவள்போலக்காணுதுபோராயே
முக்கனியேயரு ளிக்கணமே
மோகந்தனிப் பாயுந்தனுக் கேவந்தன மேதந்தனன் (மா)

அடிகண்மணி! இதற்குள் எங்குசென்றுவிட்டாய்! ஓகோ நாம் வந்து வெகுநேரமாய்விட்டது. கோபாலன் அதிசீக்கிரமாக வரச் சொன்னாரே. கோபித்துக்கொள்வாரே.

தண்ணீருக்குமிடம் என்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாதனையாகுது மைத்துனா போய்வாவென்ற
மாயன்பெருமாள்தாகம் பொறுப்பாரோ (வா)

வருவானருச்சுனனும் தருவான் தண்ணீர்என்று
வழிமேல்விழிவைத்துக்கொண் டிருப்பாரே (வா)

வந்துவெகுநேரமாச்சே இந்தக்குளத்தினிலே
மறைந்தவளிருந்ததால்மதிமருண்டுதேடினேன்
மங்கையல்லி போய்மறைந்தாள் திங்கள்வதனி

போன மார்க்க மறிகிலேனே - ஜக
மாயவன்தா கந்தீரத்தண் ணீர்கொண்டுபோவேனே (வா)

சொல்லச்சொல்ல என்னடா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நங்கையல்லிமாதினால் நாழிகையுமானதே
ஆனதே வீண் போனதே

நாரணன்வாதனை யாலென்னைத்தேடியே
நலிந்து வருந்து வாரே

அதிவிரைவாகநாம் ஆயரிடஞ்செல்லுவோம்
செல்லுவோம் இதைச் சொல்லுவோம்

ஐயோ வெனக்கூவி மெய்யுந் தளர்ந்தவர்
அவதியடைந்தனரோ - தாகத்தால்
அவதியடைந்தனரோ (நங்)

[தண்ணீரைக்கொண்டு கிருஷ்ணனிருக்கு
மிடத்தை நாடி விரைந்து செல்கின்றான்.]

## 8-வது சீன்.

### மதுரைமாநகரில் ஒருபாகம்.

கிரு—அருச்சுனு! "தண்ணீர்கொண்டுவர எவ்வளவுதூரம்சென்ருய்? வெகுநேரமாகிவிட்டதே?" (தண்ணீர் அருந்துகின்ருர்)

அரு—கோபாலா! அல்லியைத் தண்ணீரில் கண்டேன். பிடிக்கச் சென்றேன். ஓடி ஒளிந்துகொண்டாள்.

கிரு-(தனக்குள்)இன்னும் என்னசெய்கின்ருன் பார்ப்போம் அருச்சுனு! தண்ணீரருந்தியதும் நித்திரை வருகின்றது. உன்துடை மீது சிரசை வைத்துக் கொஞ்சநேரம் சயனிக்கின்றேன்.

பஞ்சவர்ணமேயுன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மைத்துனனே மெத்தத் தூக்கம் வருகுது
தூங்கிப்பின்னே தாலி கட்டிவைப்பேன்
மாறிடேனிதுசொல் மனதிலுறுதிகொள்
வாள்விஜயாமிக்க வேண்டுகிறேன் (மை)

[அருச்சுனன் துடைமேல் கிருஷ்ணன் சிரசைவைத்து நித்திரை செய்கின்ருர்]

---

[அருச்சுனன் மீண்டும் அல்லியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அதிகரித்தவனுய், சமீபத்திலிருந்த பாராங் கல்லே, எடுத்துக் கிருஷ்ணனுக்குத் தலையணையாக வைத்து விட்டுக் குளக்கரை நாடிச் செல்கின்ருன்.]

அரு—பரமாத்மா! நன்ருய்த் தூங்குகின்ருர். அவர் எழுந்திருப்பதற்குள் நான் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தக்கபாராங்கல்லேத் தூக்கி இவர்
தலைக்குப்பாரமாகத் தாக்கி இதோ
இக்கணம் என்துடை நீக்கி நான்
எழுந்தேன் மதியினல் நோக்கி

நித்திரைசெய்வதி ஞலே துயில்
நீங்கிவிழிக்குமுன் ஞலே அந்தச்
சித்தினிஅல்லியின் பாலே நானே
தேடிப்போவேனினி மேலே

மதுரைமாநகரைத் தேடி நல்ல
மார்க்கமாகநடந் தோடி ரூப
வதியல்லியைமாலை சூடி இன்று
மருவியணைவேன்கொண் டாடி

பாரிற்சுகதுக்கம் பொதுவோ அந்தப்
பாவையூர்க்குப்பாதை இதுவோ சற்றுத்
தூரத்தில்தோன்றுதே அதுவோ ஒன்றுந்
தோன்றவில்லையேயே றெதுவோ

[கிருஷ்ணன் எழுந்திருந்து, பக்கத்தில் அர்ச்சுனனைக் காணுது, தலைக்குக்கீழ் ஒருபெரிய கருங்கல் இருப்பதைப் பார்த்து வியப்புறுகின்றூர்.]

அடேதிருட்டுப் பயலே! போய்விட்டாயா? இந்தக் கோபாலனுடைய குணமனைத்துந் தெரிந்தும் அல்லியினுடைய ஆசையினுலல்லவா இப்படிச்செய்தாய்? ஆயினுமிந்தக் கல்லை என் தலையிற்போட்டு விடாமல் இம்மட்டிலாவது செய்துவிட்டுப்போனுயல்லவா? இருபயலே, உனக்கு இதற்கேற்ற கைமாறு செய்கிறேன்.

---

## 9-வது சீன்.

---

### மலைச்சாரல், அருச்சுனன் மதுரைக்குச் செல்லும் வழி.

### கிருஷ்ணன் குறத்திவேடம் பூண்டு வருகிறார்.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சுந்தரமாம் சுகிர்தகுற வஞ்சி வந்தாள் (சுந்)

அநுபல்லவி.

செந்தாமரைமுகமும் திலக முந்தளதளென்ன
கந்தக்களபம்பூசிக் காணஒயிலாய்க்கைவீசி (சுந்)

சரிகைச்சேலையிடையாள் சார்ந்த அன்னநடையாள்
மருவுமலருடையாள் வாய்ந்தபின்னற்சடையாள் (சுந்)

தெய்வலோகத்திற்சென்று செயக்குறிகோல்கைக்கொண்டு
வையகஞ்சிறக்கநின்று வாராள்குறப்பெண் இன்று (சுந்)

### குறத்தி தரு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பச்சைகுத்திலையா பச்சை
பச்சைகுத்திலையா பச்சை
பல்லிப்பச்சை பாம்புப்பச்சை
தேளுப்பச்சை மீனுப்பச்சை
மிருகப்பச்சை குளத்துப்பச்சை-பச்

அரு:—இவள் யாரோ குறப்பெண்போலத் தோற்றுகின்றது. விசாரிப்போம். அம்மா! நீங்கள் யார், எந்தவூர், இவ் அடவியில் நீங்கள்மட்டும் தனிமையாக வந்திருக்கும் காரணம் என்ன?

## குறத்தி தரு.

இராகம்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

எந்தனது திருநாடு கேட்கிறாயோ தம்பி
ஏத்தமுள்ள இந்திரனார் வாழுமெங்கள் நாடு
சந்திரர்கள் சூரியர்கள் தவம்புரியும் நாடு
தவமுனிவர் ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு
கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு
குமரேசர்வாழுமது எங்களது நாடு
வங்காளஞ் சிங்காளம் மத்யமெங்கள் நாடு
வளம்பாடிக் குறியுரைக்க வந்தேனடா தம்பி
பசிகால மானாலோ பழங்கூறி வருவோம்
பரமசிவ னுமையவட்குங் கைபார்க்குங்குறத்தி
ராமக்காள் லட்சுமக்காள் பொம்மக்கா ளென்பேர்
நலமறிந்து குறியுரைப்போம் நட்டணையாய் நாங்கள்

அரு—அப்மா! ஏதோ குறியுரைப்பதாகச் சொல்கின்றாயே! எனக்கொரு குறிசொல் பார்ப்போம்.

## குறத்தி குறி சொல்லுகிறாள்.

இராகம்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சந்த்ரகுலத்தரசர்களில் தருமரைவர் நீங்கள்
தரணிமுழுதாளுகின்ற தருமர்தம்பி நீதான்
சிலைநுதலான்வடிவழகன் தேர்விஜயன் நீதான்
தீர்த்தயாத்திரைக்காகத் திருமாலுடன் வந்தாய்
வடிவழகிசிலைநுதலாள் தென்மதுரையாளும்
மாதுஅந்தஅல்லியின்மேல் மயக்கங்கொண்டாய் நீயும்
ஆறாயிரம் பாண்டியர்க்கு அரியதுரைமகளாம்
அல்லியின்மேலாவல்கொண்டு அவதியுற்றாய்நீயும்
உண்மையாபொய்யாசொல்யானுரைத்தவைகளெல்லாம்
உத்தமனே புகன்றிடுவாய் இத்தகியேநீயும்

அரு—அம்மா! நீயுரைத்தவைகள் எல்லாம் உண்மையாகவே யிருக்கின்றது. கோரிப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல் வந்திருக்கிறாய். நீ மானிடஜென்மந்தானோ! அல்லது இவ்வனத்தில் வாழும் தேவதையோ! எவ்வாறு வந்தனையோ தெரியவில்லை. அல்லியென்பவள் மீது நான் ஆசையுற்றிருப்பதாய்த் தெரிவித்தனையே! அந்த அல்லி எனக்குக் கிடைப்பாளா! அல்லது கிடைக்கமாட்டாளா? அம்மா!

குற—ஐயா! உமக்கு அந்த அல்லியைக் கிடைக்கும்படி செய்கிறேன்! அவ்வாறு செய்தால் எனக்கு என்ன கொடுப்பீர்?

அரு—அந்த அல்லி எனக்குக் கிட்டும்படி செய்தால்உமக்குவேண்டிய ஆடையாபரணங்களெல்லாம் தருகிறேனம்மா?

குற—நீர் அணிந்திருக்கும் ஆடையாபரணங்களைக் கொடுப்பீரா?

அரு—ஆகா அப்படியே கொடுக்கிறேனம்மா!

குற—என்னால் கொடுக்கக்கூடிய இந்த மூன்று மாத்திரைகளையும் அல்லிக்குளத்தில் கொண்டுபோய்க் கரைப்பாயானால் அந்தத் தண்ணீரை அவள் சாப்பிட்ட மாத்திரத்தில் உன்மீதில் பிரியங்கொண்டு உன்னையே விவாஹம் செய்துகொள்வாள்.

அரு—அம்மா! இது உண்மைதானா, பலிதமாகாவிடிலோ?

குற—உண்மைதான்! அவ்வாறு உனக்குப் பலிதமாகாவிடில் மறுபடியும் நீகொடுக்கும் ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்குத் தடையே இல்லை.

அரு—இதோ ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொள். "இவள் கொடுத்தது என் மனத்திற்குக் கொஞ்சமேனும் பிடித்தமில்லை. ஆயினும் பார்க்கிறேன்" அம்மா சென்றுவரலாமா?

குற—ஆகா தடையென்ன! தாமதம் செய்யாமல் செல்.

## 10-வது சீன்.

# அல்லிக்குளம்.

## அருச்சுனன் மருந்துரைத்தல்.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

குறத்திதந்த மாத்திரையைக் குளத்திலே உரைக்கின்றேன்
குளத்திலே உரைக்கின்றேன் ஜலத்திலே கரைக்கின்றேன் (குற)

அல்லியரசாணிமாதே அழகுநவரத்தினமே
அழகுநவ ரத்தினமே அலேகிறேன் நானித்தினமே (குற)

செல்வி யல்லிமாதேஎந்தன் சிந்தனை தவிர்ப்பையே
சிந்தனை தவிர்ப்பையே வந்தென்குறைதீர்ப்பையே (குற)

மருளதுமிஞ்சுவதால் மயக்கமுமாகுதடி
மயக்கமு மாகுதடி தியக்கமேலாகுதடி (குற)

மங்கையல்லிமாதேஉனை மணம்செய்வதும் எத்தினமே
மணஞ்செய்வது மெத்தினமே மகிழுமணிரத்தினமே (குற)

---

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கண்மணியேநல்ல பெண்மணியே மிக்கக்
கருத்துவைத்துமேதானே கருணை புரிசெந்தேனே
காதல்மிகுத்து உன்னைக் காணவந்தேனடி
கருத எனையித் தருண மிதுவே
பருவரதியே வாராயிக் குளமருகினில் நேராய் (கண்)

சித்திரத்தினச் சித்தினிமாதேஎன்
சித்தம்நொந்திடவே தியங்கி வந்தேனிதுநாளே
தேனேஎன்னுவிமிகத் தேடி-நொந்ததடி
சஞ்சலமான தனஞ்சயன் நான்மிக்க
ரஞ்சிதமாகவே நீயே தஞ்சமுன்னருள் செய்வாயே (கண்)

உத்தமியே எந்தன் பத்தினியே மன
மொத்துடையார் பதம்பாடி உளமகிழ்ந்துகொண்டாடி
உள்ளமகிழ்வுடனே ஓடிவந்தேனடி
உந்தனுக்காக மருந்து கைப்பற்றிஇ
ருந்தநகை கொடுத்தேனே சந்தமிகுமடமானே (கண்)

செல்லவல்லியே தொல்லுலகையாளும்
மெல்லியரேயிங்குநாமே நல்லபதம் பெறலாமே
மாதேநின்னுசையா லென்மனமுருகுதடி
மருந்துகஸ்ரையுந் தருணமுனது
மனதுங்கரைந்திடாதோ வஞ்சியேஎன்மீதுவாதோ (கண்)

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அஞ்சுகமேநீ வருவாயே எனக்
கருமையாய் விரைவினில்தெரிசனந் தருவாயே (அஞ்)

அல்லியே மெல்லியே
அல்லியே மெல்லியே
அல்லியே மெல்லியே
அல்லியே மெல்லியே
அதிரூபமலர்மானே எதிருறு எழில்மிகு (அஞ்)

அரு— ஆ ஆ கண்மணி! அல்லியரசாணி! உன்னையான் எப்போது காண்பேன். எனது ஆவலை என்று தீர்ப்பாய் பெண்மணி?

[தண்ணீரெடுக்கவந்த தோழிகள் அவனைப்பார்த்து]

என்னடி! யாரோ ஒருவன் குளத்தில் வந்து, நமது அரசியினுடைய பெயரையும் சொல்லிக்கொண்டு, ஏதோ மருந்து உரைத்துக்கொண்டிருக்கின்றனே! என்ன தைரியம் பார்த்தீர்களா?

177304

[எல்லோரும் அருச்சுனனிட
சென்று அவனைக் கோபித்து.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

யாரடா நீர்மூடா படுபாவி உலகிலிது தகுமோடா (யா)

பேயேசீச்சீ செல்லுவாயே ரா ...
பேர்தனைப் புகன்றாயே உயிர்
போக்குவோ மறிநீயே சனி
போலவேதனியாக வந்தநீயே

அரு- தாதிநீங்கள் கூடி என்தேவியல்லிக்கிதைச்சொல்லியவ

சேதிவந்து புகல்வீரே கவ
மேயடைவீ ரினிநீரே உ
நீருமுருவிலி போரே அங்குநே

ஹே பெண்மணிகாள்! உங்களரசி அல்லியரசாணிக்காக
கஷ்டத்தைப் பார்த்தீர்களா! ஏன் உங்களுக்கு இ
மிரங்கவில்லை? உடனே சென்று தெரிவித்து அவ
வாருங்கள்.

தோழி—சகிகாள்! பார்த்தீர்களா! நமது அரசியினிட
தெரிவிப்போம் வாருங்கள்.

---

முதற்பாகம்.

முற்றிற்று.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் மீது.

சிங்காரச் சந்த வர்ணமெட்டுகள் அடங்கிய பக்திரச

## இசையலங்கிர்த சங்கீர்த்தனங்கள்.

இது நாகலாபுரம் வித்வசித்திரக்கவி,

எஸ். எஸ். கணபதி ஓதுவார் சுவாமிகளால்

புதிதாக இயற்றப்பெற்றது.

பக்த சிரோமணிகாள்! இதுவரை வெளிவந்துள்ள பக்திரஸ கீர்த்தனங்கள் அனேகம் படித்தும், கேட்டு மிருப்பீர்கள். ஆயினும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ள பாடல்களில் அமைந்த இசைகளின் அலங்காரம் கேட்கக் கேட்கக் கிளர்ச்சியையும், இந்துஸ்தான், கவாய், தில்லாணு, டப்பா, சிந்து முதலிய சிங்காரச் சந்த வர்ணமெட்டுகள் சிந்தைக் கின்பத்தையும், படிக்கப்படிக்கப் பக்தியையும் விளைவிக்குமென்பதில் ஐயமில்லை. விலை அணு 4.

---

வடக்கம் பட்டி உபாத்தியாயர்

குப்பாத் தேவரவர்கள் இயற்றிய

## அற்புத நூதனக் காவடிச்சிந்து.

இதுவரை வெளிவந்துள்ள காவடிச் சிந்துகளில் உலகப் பிரசித்தமாகப் பிரகாசிப்பது அண்ணாமலை ரெட்டியாரவர்கள் காவடிச் சிந்து ஒன்றேதான். அதற்கு இணையாக வேறொரு காவடிச்சிந்து வெளிவர வேண்டுமென்று நோக்கம் கொண்ட உபாத்தியாயர் குப்பாத்தேவர் இயற்றிய இந்த அற்புத நூதனக் காவடிச்சிந்தில் ஒரு நாயகன் தன் நாயகியுடன் பங்குனி உற்சவத்திற்குப் பரங்கிரி வேலவனைத் தெரிசிக்கவரும் வழியில் காணும் காவடிகளின் காட்சிகளைக்கூறும்சிறப்பும், ஆலயத்துள் குகப்பெருமானைத்தெரிசிக்கும் பக்திமிகுந்த தோத்திரமும் அப்பெருமானது திருவிளையாடல்களைச் செப்புவதும், அதில் தினைப்புனங்காக்கும் வள்ளிநாயகியாரிடம் வேலவர் வளையல் செட்டியாராய்ச் சென்று, வளையலின் வனப்பைக் கூறலும் வள்ளிநாயகி செட்டியாரைக் கேலியாய் விலை கேட்பதும் செட்டியார் வேடிக்கையாய் விலை கூறுவதும் சல்லாப மொழிகளால் உல்லாகம் பேசலும், இருவர்க்கும் நடக்கும் ஏசலும் எடுத்துக் கூறுவது படிக்கவும், கேட்கவும் ஆனந்தமாகவும் அற்புதமாகவும் வேடிக்கையாகவும் நூதனமாகவும் சிங்காரமாகவு மிருக்கும். விலை 0—1—0.

## ரெங்கூன் அதிசயக்காவடிச்சிந்து.

இதில் ரெங்கூன் நகரலங்காரச்சிறப்பும், வெளி நாடுகளிலிருந்து பொருள் சம்பாதிக்கச் செல்வோர் அடையும் பயனும், அங்குள்ளோர் மாயவலையில் அகப்பட்டு அவஸ்தைப்படுவோர் கெதியும் பலவித சிந்துமெட்டுகளில் இயற்றப்பட்டிருக்கிறது. படிக்கப்படிக்கத் தெவிட்டாததாயிருக்கும். விலை ரூ 0-1-0

# காமன் பண்டிகை எரிந்தகட்சி

# மன்மதன் லாவணி.

துவாதசாந்த ஸ்தலவாசகர்,

## ஸ்ரீமான் பழனிக்குமாரு சுவாமிகள் இயற்றியது.

இதில் காமன் பண்டிகையின் சிறப்பும், மதுரை மஹால் வர்ணனையும், பண்டிகை மேடையின் சிங்காரமும் லாவணி மெட்டு களில் பாடியுள்ளது படிக்கப்படிக்கத் தமாஷாய் இருக்கும்.

மன்மதன் இரதிதேவியாரிடம் விடைபெற்றுச் செல்லுங் கால் இருவருக்கும் ஏற்படும் தர்க்கம் விசித்திரமாயிருக்கும்.

இரதி புலம்பல் ஒப்பாரிகள் மிக்க உருக்கமாயிருக்கும். மன்மதன் எரிந்தகட்சிக் கேள்வி லாவணிகள் பாட்டிற் சிறந்தும் புராண ஆராய்ச்சிகள் நிறைந்துமிருக்கும். விலை அணா 6.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

# டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! **12**-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தம்.

மூந்துங்கள்! புத்தகத்திற்கு மூந்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், மதுரைவீரன் சரித்ரம், துரோபதைவஸ்திராபஹரணம், கீசக சம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்வதி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம், முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக் கப்பெற்றது. விலை ரூ. 1-4-0

விடாநகைப்பை விளைவிக்கும்

# விநோதவிகட சிந்தாமணி.

நண்பர்காள்! இதுவரை விகடப்புத்தகங்கள் அனேகம் பார்த் திருப்பீர்கள். ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாய் இரா தென்பது திண்ணம். விலை அணா 4.

## ஷை இரண்டாம் பாகம்.

இதில் விகடப்பிரசங்கத்திற்குரிய கதைகள் ஏராளமாய் அடங் கியுள்ளது. கதைகள் நினைக்குந்தோறும் சிரிப்பை உண்டாக்கும். விலை அணா 6.

கோமாளிப்பாட்டு விகடமாகவே இருக்கும் அணா 1.

## இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.